# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 120/2022

Deposition of PW1 witness of Plaintiff/Petitioner/ Defendant /Respondent Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X 1872 on the 06th day of July 2023.

| | |
|---|---|
| Name : சிவகாமி | Caste: |
| Father / Husband's Name: பால்ராஜ் | Calling: |
| Village : | Religion: |
| Taluk : | Age: |
| Date : | |

**06-07-2023**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரமாண பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். தாவா சொத்தை கிரயம் செய்து தரச்சொல்லி வழக்கு போட்டிருக்கிறேன். தாவா சொத்து 876 சதுரடி ஆகும். அதை ரூ.3,50,000/-க்கு விலைக்கு வாங்கினோம். அந்த விவரத்தை வழக்குரையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதி லதா, ருக்மணி மற்றும் செல்வநாயகி ஆகியோருக்கு சொந்தம் என்றால் ஆமாம். அவர்கள் மூவரும் என் கணவரின் உடன் பிறந்த சகோரர்களின் மனைவிகள் என்றால் ஆமாம். தாவா சொத்து 1980 ம் வருடம் கனகரத்தினம், பூவாயம்மாள் ஆகியோரிடம் இருந்து லதா, ருக்மணி மற்றும் செல்வநாயகி கிரயம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். அந்த சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் எனக்கு

தெரியாது. பிரதிவாதியின் கணவர் தேவராஜ், குருவம்மாள் என்பவரிடம் 810 சதுரடியை வா.த.சா.ஆ–A5 கிரய பத்திரம் மூலம் கிரயம் வாங்கினார் என்றால் ஆமாம். மொத்த சொத்தான 4642 சதுரடி சொத்தை பிரதிவாதி லதா, ருக்மணி மற்றும் செல்வநாயகி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். அதில் பிரதிவாதிக்கு 1584 சதுரடி பாகமாக கிடைத்தது என்றும், அதில் எனக்கு 876 சதுரடி பிரதிவாதி கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த கிரய பத்திரத்தை பதிவு செய்யவில்லை. அது வா.த.சா.ஆ–A1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.த.சா.ஆ–A1 பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் வா.த.சா.ஆ–A1 Stamp Duty Penalty செலுத்த வேண்டி வழக்கின் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.